


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு பிப்ரவரி 08 * 2026 * மலர் -1 * இதழ்-250* VOL-1 * ISSUE-250 விலை ரூ.3 * பக்கம் -4

# தி.மு.க. கூட்டணியில் ராமதாசை சேர்த்தால் நாங்கள் வெளியேறுவோம்!

## விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் அறிவிப்பு!!

சென்னை, பிப்.08–

தி.மு.க. கூட்டணியில் ராமதாசை சேர்த்தால் நாங்கள் வெளியேறிவிடுவோம் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்துள்ளார். அதே நேரத்தில் தி.மு.க.வை நாங்கள் நிர்ப்பந்திக்க மாட்டோம் என்றும் கூறியுள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல்–மே மாதத்தில் நடக்க வாய்ப்புள்ளது. அத்துடன் புதுச்சேரி சட்டசபை தேர்தலும் நடக்கும். இந்த 2 மாநிலத் தேர்தல்களும் ஒரே கட்டமாக, ஒரே நாளில் நடக்க வாய்ப்புள்ளது.

இந்த தேர்தலில் தமிழகத்தைப் பொறுத்தவரை 4 முனைப்போட்டி ஏற்படும் சூழல் உள்ளது. வழக்கம்போல சீமான் கட்சி தனித்து போட்டியிடுகிறது. விஜயின் தமிழக வெற்றிக் கழகத்துடன் இதுவரை எந்த கட்சியும் இணையவில்லை.

ஆகவே தி.மு.க. – அ.தி.மு.க. ஆகிய இரு பெரும் கட்சிகளின் தலைமைகளில்தான் 2 பெரிய கூட்டணிகள் அமைந்துள்ளன.

அ.தி.மு.க. கூட்டணியைப் பொறுத்தவரை நீண்ட நாட்களாக பா.ஜ.க.வும், அதனுடன் உறவு வைத்திருந்த சில கட்சிகளும் மட்டுமே சேர்ந்திருந்தன. சமீபத்தில் தான்அன்புமணிதலைமையிலான பா.ம.க.வும், தினகரன் கட்சியும் அடுத்தடுத்து இணைந்தன.

அதே நேரத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி தொடர்ந்து வலுவோடு இருந்து வருகிறது. கடந்த தேர்தலில் இருந்த கட்சிகள் அப்படியே நீடிக்கின்றன. அத்துடன் கமல் கட்சியும் சேர்ந்துள்ளது.

இருந்தாலும் தி.மு.க. கூட்டணியும், அ.தி.மு.க. கூட்டணியும் இன்னும் முழு வடிவம் பெறவில்லை. அதற்குக் காரணம் ராமதாஸ் தலைமையிலான பா.ம.க., தே.மு.தி.க. ஆகிய கட்சிகள் இன்னும் எந்த அணியுடனும் இணையவில்லை.

இவற்றுக்காக இரு பெரும் கூட்டணிகளும் கதவை திறந்து வைத்திருப்பதாக செய்தி வெளியானது. தே.மு.தி.க. இரு பக்கமும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

ஆனால் ராமதாஸ் நிலை அப்படி அல்ல. அ.தி.மு.க. அணியில் அன்புமணி சேர்ந்துவிட்டதால், தி.மு.க. பக்கம் சேர ராமதாஸ் விரும்பினார். அதற்காக பேச்சுவார்த்தை நடந்து வந்ததாகவும் செய்தி வெளியானது.

ஆனால் தி.மு.க. அணியில் வி.சி.க. இருப்பது சிறிய நெருடலை ஏற்படுத்தி வந்தது. அதை சரிகட்டி விடலாம் என தி.மு.க. தலைவர்கள் கருதினார்கள். ஆனால் வி.சி.க. தலைவர் திருமாவளவன் அவ்வப்போது ஒரு கருத்தை தெரிவித்து வந்தார்.



அதாவது பா.ஜ.க. மத அரசியல் செய்யும் கட்சி என்றும், பா.ம.க. சாதி ரீதியான கட்சி என்ற அடிப்படையிலும் கருத்து தெரிவித்தார். இந்த கட்சி களுடன் கூட்டணி கிடையாது என்று ஏற்கனவே எடுக்கப்பட்ட கொள்கை முடிவு நீடிப்பதாகவும் கூறினார்.

அதே நேரத்தில் கூட்டணிக்கு தலைவர் என்ற முறையில் எந்த கட்சியையும் கூட்டணியில் சேர்க்கும் உரிமை தி.மு.க.வுக்கு உண்டு என்றும் தெரிவித்தார். இதன் மூலம் ராமதாசை சேர்க்கக் கூடாது என்று அவர் வெளிப்படையாக சொல்லவில்லை.

இந்த நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் சிறப்பு பேட்டியளித்துள்ளார்.

அதில் அவர் கூறியதாவது:–

"பா.ஜ.க. மத வெறுப்பு அரசியலை செய்கிறது. பா.ம.க. சாதிய வெறுப்பு அரசியலை செய்கிறது. அந்த 2 கட்சிகளுடன் கூட்டணி அமைக்க மாட்டோம். அந்தக் கூட்டணியில் இடம் பெற மாட்டோம் என்பதை எப்போதோ முடிவு செய்துவிட்டோம். அது இன்று நேற்று எடுத்த முடிவு இல்லை. எங்கள் நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

விசிக வெளியேறும்

ராமதாஸ் தி.மு.க. கூட்டணியில் இணைந்தால் நாங்கள் வெளியேறி விடுவோம். கூட்டணி கட்டுமானம் என்பது திமுகவின் உரிமை. அந்த முடிவை எடுப்பதற்கான உரிமை, சுதந்திரம், அதிகாரம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால் திமுகவுக்கு அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை. திமுக அந்த முடிவை எடுத்தால் எங்கள் நிலைப்பாட்டிற்காககூட்டணியில் இருந்து வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. தேர்தலுக்காக பாதையை மாற்ற முடியாது.

கருத்தியலும், நம்பகத்தன்மையும் முக்கியம். எங்கள் முடிவில் சமரசம் கிடையாது. ராமதாஸ் திமுக கூட்டணிக்கு வந்தால் விசிக வெளியேறும். பிளவு அரசியல் சக்திகளுடன் பணியாற்ற முடியாது. சாதி, மதம் என்கிற பெயரில் வெறுப்பு அரசியல் செய்வதை அனுமதிக்க முடியாது. மக்களிடம் நம்பத்தன்மையை இழக்கக் கூடாது என்று நினைக்கிறோம்.

விசிக கொள்கை மாறாது

சமூக பொறியியல் என்கிற பெயரில் பாமக வெறுப்பு அரசியல் செய்கிறது. தேர்தலுக்காக கொள்கையை மாற்ற முடியாது. எங்களுக்கு தேர்தலைவிட விசிக மீதான மக்களின் நம்பிக்கை முக்கியம். தவெக முழுமையான அரசியல் இயக்கமாக மாறவில்லை".

இவ்வாறு திருமாவளவன் கூறியுள்ளார்.

அவரது இந்த கருத்து தி.மு.க. கூட்டணியிலும், அரசியல் வட்டாரத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தினமும் உள்ளாட்சி அரசு படியுங்கள்



விருதுநகரில் தி.மு.க. தென்மண்டல இளைஞரணி மாநாட்டு பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார். அருகில் அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம்தென்னரசு ஆகியோர் உள்ளனர்.



கோவையில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் 101வது பிறந்தநாள் விழா அதிமுக சார்பில் எஸ் எஸ் குளம் ஒன்றியம் வையம்பாளையத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற எதிர்க்கட்சி கொரடாவும் ஆன எஸ்.பி. வேலுமணி தலைமையில் எம்எல்ஏக்கள் பி. ஆர். ஜி. அருண்குமார், அம்மன் அர்ஜூனன், கே .ஆர். ஜெயராமன், கந்தசாமி, ஏ. கே. செல்வராஜ், முன்னால் அமைச்சர் செ. மா. வேலுச்சாமி ஆகியோர் நாராயணசாமி நாயுடுவின் மணிமண்டபத்தில் மலர் வளையம் வைத்தும், அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்தும் மரியாதை செலுத்தினர். மேலும் இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணியம், சுகுமார், முன்னாள் ஊராட்சி தலைவர்கள் கோவிந்தராஜ், சுபத்ரா புருஷோத்தமன் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உட்பட கலந்து கொண்டனர்.







## இந்து பாதுகாப்பு படையின் இந்து எழுச்சி மாநாடு!

### இந்து பாதுகாப்பு படையும் தேசிய தலைவர் அழைப்பு அறிவிப்பு !!



ஈரோடு,பிப்.8

ஈரோடு மாவட்டம் பெருந்துறை விஜயமங்கலம் டோல் கேட் அருகில் வருகின்ற பிப்ரவரி எட்டாம் தேதி ஞாயிறன்று மாலை 3 மணி அளவில் இந்து பாதுகாப்பு படையின் மாபெரும் இந்து எழுச்சி மாநாடு நடைபெறுகிறது அது சமயம் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து இந்து சொந்தங்களும் காவி சொந்தங்களும் இந்து பாதுகாப்பு படையின் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து நிலை நிர்வாகிகளும் மகளிர் அணியினரும் தவறாமல் கலந்துகொண்டு இந்திய மக்களின் எழுச்சியை உலகிற்கு பறைசாற்ற வேண்டும் எனவே அனைவரும் தவறாமல்கலந்துகொள்ள வேண்டும் என இந்து பாதுகாப்பு படையின் தேசிய தலைவர் கண்ணன் அழைப்பு அறிவிப்பு விடுத்துள்ளார்



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் LAMPS சங்கம் மூலம் இணைந்து பழங்குடியின மக்களுக்கு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் உண்ணிக்குச்சிகளை கொண்டு உயிரி எரிபொருள் தயாரிக்கும் திட்டத்திற்கு தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்காக தூணக்கடவு மலைவாழ் பழங்குடியினர் விளக்கு கூட்டுறவு சங்கத்திற்கு யூனியன் வங்கியின் சிஎஸ்ஆர் நிதியின் மூலம் ரூ.13.60 லட்சத்திற்கு காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார்.கிரியப்பனவர்யூனியன்வங்கிமண்டலதலைமைமேலாளர்எஸ்.எ.ராஜ்குமார், பிராந்திய மேலாளர் எஸ்.எஸ்.லாவண்யா, வங்கி மேலாளர் அபிராமி நாகராஜன் ஆகியோர் வழங்கினார்கள்.



## சேலத்தில்

# 5 தேர்தல் அறிவிப்புகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை அ.தி.மு.க.வினர் பொதுமக்களிடம் வழங்கினர்!

சேலம், பிப்.8

தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் சில மாதமே உள்ள நிலையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமி, தங்களது கட்சியின் சார்பில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அறிவிக்கப்பட உள்ள தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். அதன்படி கடந்த வாரம் வெளியிட்ட 5 தேர்தல் அறிவிப்புகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை, தமிழகம் முழுவதும் அக்கட்சியினர் பொது மக்களுக்கு வழங்கி தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக சேலம் மாநகர் மாவட்ட அஸ்தம்பட்டி பகுதி கழகம் இரண்டு, 13வது கோட்டம் ஏ பிரிவின் சார்பில், அஸ்தம்பட்டி மாரியம்மன் கோவில் பகுதியில் வசிக்கும்

பொது மக்களை, சேலம் மாநகர் மாவட்ட மாநகர அதிமுக செயலாளர் ஏகேஎஸ்எம் பாலு தலைமையில், அஸ்தம்ட்டி அதிமுக பகுதி இரண்டின் செயலாளர் பிரகாஷ் அப்பாதுரை, 13 ஏ கோட்ட செயலாளர் குமார், ஆகியோரின் முன்னிலையில், பொது மக்களை இன்று வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்து, அக்கட்சியின் பொது செயலாளர் எடப்பாடிபழனிசாமிஅறிவித்த,விடியா ஆட்சி அதற்கு பில்லே சாட்சி என்ற நூதனபிரச்சாரத்தை,விலைவாசிஉயர்வு குறித்து, பில்லிங் மெசின் மூலம் பொது மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் பிரச்சாரம் மேற்கொண்டனர். மேலும் மாநகர செயலாளர் பாலு, அதிமுக தேர்தல்அறிவிப்புகள்மற்றும்விலையேற்றம் குறித்த ரசிதுகளை பொது மக்களிடம் வழங்கி, அது குறித்து விளக்கமாக எடுத்துரைத்து, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பொதுமக்களுக்கு எண்ணற்ற பல திட்டங்களை செயல்படுத்த உள்ள முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னத்திலும், கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு, அவர்களுக்கு என்று ஒதுக்கப்படும் சின்னத்திலும், பெருவாரியான வாக்குகளை அளித்து மாபெரும் வெற்றி வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். கடந்த ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்த எடப்பாடி பழனிச்சாமி, இம்முறை மீண்டும் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, நிச்சயம் தமிழக மக்களின் எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை கொண்டு வருவார். அதேபோல மகளிர் நலன், தற்போது திமுக ஆட்சியில் உள்ள விலைவாசி ஏற்றம், பாலியல் வன்முறை, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை எடப்பாடி பழனிசாமி நிச்சயம் அறவே ஒழித்துக் கட்டுவார். எனவே வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இரட்டை இலைக்கு சின்னத்திற்கு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற, இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று சேலம் மாநகர் மாவட்ட செயலாளர் ஏகேஎஸ்எம் பாலு, வட்ட கழக துணை செயலாளர் கவிதா, 13வது கோட்ட பொறுப்பாளரும், மாநகர் மாவட்ட மாணவர் அணி தலைவருமான குமார், வெங்கடேஷ், செல்வம், சுசிலா, லட்சுமி, அஸ்தம்பட்டி பகுதி கழகம் இரண்டின் தகவல் தொழில்நுட்ப இணை செயலாளர் ராஜேந்திரன், உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட அதிமுகவினர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், நீர்வளத்துறையின் சார்பில் இன்று முதல் 55 நாட்களுக்கு வாணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பகுதி விவசாய நிலங்களின் பாசனத்திற்காக தண்ணீரை தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர்.இரா.கவிதா, பொதுப்பணித்துறை (நீர் வள ஆதாரம்) செயற்பொறியாளர் செந்தில்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சரவணன், உதவி செயற்பொறியாளர்.மோகனப்பிரியா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# தாராபுரதில் நகர மன்ற சாதாரண கூட்டம்; பாப்பு கண்ணன் தலைமையில் நடந்தது!



தாராபுரம், பிப்.8

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் நகர மன்ற சாதாரண கூட்டம் நகர மன்ற தலைவர் பாப்பு கண்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தாராபுரம் நகராட்சி ஆணையாளர் முஸ்தபா முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் மொத்தம் 78 தீர்மானங்கள் தீர்மான நகலாக ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. நடைபெற்ற கூட்டத்தில் 11 தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டு 67 தீர்மானங்கள் மட்டும் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் குடிநீர் மற்றும் போர்வெல் பராமரிப்பு பணிக்காக சுமார் 30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 3 பொது சுகாதார கழிப்பிடத்தை பராமரிக்க சுமார் 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதேபோல் மழை நீர் வடிகால் இதர தேவைகள் மறு சீரமைப்பு வசதிக்காக 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தார் சாலை மேம்படுத்தவும் மறு சீரமைப்பு செய்வதற்காக 53 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து தாராபுரம் நகராட்சியில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் மொத்தம் 64 கடைகள் உள்ளது.

இந்த கடைகளுக்கு ஏலம் விடப்பட்டிருந்தது. நகராட்சிக்கு வருவாய் குறைவாக இருந்த காரணத்தினால் பேருந்து நிலையத்தில் உள்ள 64 கடைகளும் நகராட்சிக்கு வருவாயை பெருக்கும் நோக்கில் அனைத்து நகரமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தோடு மறு ஏலம் விட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. நடைபெற்ற நகராட்சி கூட்டத்தில் பெரும்பான்மையான நகராட்சி கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

# வள்ளிப்பட்டு கிராமத்தில் எருது விடும் விழா; 250 க்கு மேற்பட்ட காளைகள் பங்கேற்றன!



வாணியம்பாடி, பிப்.8

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வள்ளிப்பட்டு கிராமத்தில் மாபெரும் எருது விடும் திருவிழா நடைபெற்றது.

விழாவுக்கு ஊர் கவுண்டர் ஆர். கபிதாஸ் தலைமை வகித்தார், ஊர் நாட்டாண்மை எம்.சதானந்தன் , ஊர் கவுண்டர் ஆர்.கதிரியப்பன், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர்கள் கோவி. ஜெயராமன், பொன்.வேலு, எம்.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவை ஊராட்சி மன்ற தலைவர் ஏ.சுப்பிரமணி, ஒன்றிய குழு உறுப்பினர் கோவி. ச.பிரபாகரன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதில் வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர் கிருஷ்ணகிரி திருவண்ணாமலை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆந்திரா மாநிலத்திலிருந்து 250க்கும் மேற்பட்ட காளைகள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் வீதியில் சீறி பாய்ந்தன.

பரிசளிப்பு விழாவில் முன்னால் சட்ட மன்ற உறுப்பினர் கோவி. சம்பத்குமார் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட தூரத்தை குறைந்த வினாடிகளில் கடந்த காளை உரிமையாளர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1 லட்சத்து 11 ஆயிரத்து 111 ரூபாய், இரண்டாவது பரிசு 88 ஆயிரத்து 888 ரூபாய், மூன்றாவது பரிசு 66 ஆயிரத்து 666 ரூபாய் என மொத்தம் 72 பரிசுகள் வழங்கினார்.

விழாவில் ஆயிரக்கணக்கான கிராமமக்கள் கலந்து கொண்டு விழாவை கண்டு களித்தனர். விழாக்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்து இருந்தனர்.

வாணியம்பாடி வட்டாட்சியர் சுதாகர் தலைமையில் வருவாய்த்

துறையினர், காவல் துணை கண்காணிப்பாளர் மகாலக்ஷ்மி தலைமையில் 100 கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# காரிமங்கலம் அருகே நீர் நிலை ஆக்கிரமித்து கட்டப்பட்ட 34 வீடுகள் அகற்றம்!



காரிமங்கலம், பிப்.8

தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் அடுத்த சின்ன மாட்லாம்பட்டியில் நீர் நிலைக்கு சொந்தமான இடத்தை 34 நபர்கள் ஆக்கிரமித்து கடந்த 20 ஆண்டுகளாக கடைகள் மற்றும் வீடுகளை கட்டி பயன்படுத்தி வந்தனர். மாவட்ட நிர்வாகம் சார்பில் இடத்தை காலி செய்து ஆக்கிரமிப்புக்களை அகற்றகோரி பல முறை நோட்டீஸ் அனுப்பியும் ஆக்கிரமிப்புக்கள் அகற்றபடாமல் இருந்து வந்தது.

ஆக்கிரமிப்புக்களை அகற்ற கோரி நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து

நேற்று டி.எஸ்.பி. ராஜ சுந்தர் தலைமையிலும், காரிமங்கலம் தாசில்தார் மனோகரன், வட்டார வளர்ச்சி அலுவலர் கலைச்செல்வி ஆகியோர் முன்னிலையிலும் ஜே.சி.பி எந்திரம் மூலம் நீர் நிலைகளை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட 34 வீடுகள் மற்றும் கடைகளை இடித்து அப்புறப்படுத்தினர்.

50 க்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆமூர் முதல் டி.கொளத்தூர் வரை உள்ள ஜல்லி சாலையை இணைப்பு சாலையை தார்சாலையாக அமைத்து தரவேண்டும் என விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.






# சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் அமெரிக்க குடியேற்ற வழக்கறிஞர் உலகளாவிய விசா நெருக்கடி மற்றும் EB5 வாய்ப்புகள் பற்றி விளக்கம்!

சென்னை, பிப்.8



நடாடூர் எஸ். குமார் சட்ட நிறுவனம், தாஜ் கொரமண்டல், சென்னையில் நடத்திய சிறப்பு கருத்தரங்கு, வேகமாக மாறிவரும் அமெரிக்க குடியேற்ற சூழல் மற்றும் இந்திய மாணவர்கள், தொழில்முறை நிபுணர்கள், முதலீட்டாளர்கள், குடும்பங்களுக்கான மாற்று உத்திகள் குறித்து விரிவாக கவனம் செலுத்தியது. 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட முன்னணி அமெரிக்க குடியேற்ற வழக்கறிஞர் நடாடூர்எஸ்.குமார், உலகளாவிய விசா நெருக்கடி, தூதரகங்களில் அதிகரித்துள்ள ஆய்வு, F1 மாணவர் விசா சவால்கள், H1B லாட்டரி மாற்றங்கள், L1 நிலைத்தன்மை, B1/B2 காத்திருப்பு நேரம் மற்றும் இந்திய–அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் பின்னணியை விளக்கினார். இந்திய விண்ணப்பதாரர்கள் நீண்ட கிரீன் கார்டு தாமதங்கள் மற்றும் கடுமையான விசா ஆய்வுகளை எதிர்கொள்ளும் சூழலில், EB5 குடியேற்ற முதலீட்டாளர் திட்டம் ஒரு முக்கிய மாற்று வழியாக வலியுறுத்தப்பட்டது. TEA பகுதிகளில் $800,000 மற்றும் சாதாரண திட்டங்களுக்கு $1,050,000 முதலீடு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், 'Current' நிலை காரணமாக செயல்முறை வேகமாக உள்ளது. அமெரிக்காவில் உள்ளவர்கள் நிலையை உள்ளூரிலேயே மாற்றிக் கொண்டு, சில மாதங்களில் வேலை அனுமதி, சமூக பாதுகாப்பு எண், 'Advance Parole' வசதி மற்றும் சுமார் இரண்டு ஆண்டுகளில் நிபந்தனை கிரீன் கார்டைப் பெற முடியும் என விளக்கப்பட்டது. கேள்விபதில் அமர்வில் மாணவர்கள், பணியில் உள்ள நிபுணர்கள், தொழில் முனைவோர் மற்றும் உயர்நிகர மதிப்புள்ள முதலீட்டாளர்கள் உற்சாகமாக கலந்துகொண்டனர். விசாமறுப்புகள், கொள்கைதெளிவின்மை, நீண்ட காத்திருப்பு நேரங்கள் மற்றும் குடியேற்ற வழிகளின் ஒப்பீட்டு நன்மைகள் குறித்து வழங்கப்பட்ட தெளிவான விளக்கங்கள், EB5 திட்டத்தை அமெரிக்க நிரந்தர குடியிருப்புக்கான நடைமுறை வாய்ப்பாக பலருக்கு புரிய வைத்தது.

# OPPO Reno15 Series வெளியீடு – Pro, Pro Mini மற்றும் 200MP கேமரா வசதியுடன் புதிய தலைமுறை ஸ்மார்ட்போன்கள்!

சென்னை, பிப்.8



OPPO India நிறுவனம் இன்று தனது புதிய பிரீமியம் Reno15 Seriesஐ அறிமுகப்படுத்தியுள்ளது; இதில் Reno15 Pro, Reno15 Pro Mini மற்றும் Reno15 மாடல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தொடர் பயணிகள், போட்டோகிராபி ஆர்வலர்கள் மற்றும் இளைய தலைமுறையை கவரும் வகையில் வடிவமைக்கப்பட்ட olup, PureTone Technology, AI Portrait Camera மற்றும் புதிய Popout வசதி போன்ற முன்னணி 200MP கேமரா, கேமரா மற்றும் AI அம்சங்களை வழங்குகிறது. Reno15 Pro மற்றும் Reno15 Pro Mini மாடல்கள் HP5 சென்சார் கொண்ட 200MP அல்ட்ராகிளியர் மெயின் கேமராவுடன், 50MP 3.5x optical zoom lens மற்றும் 120x digital zoom வசதியுடன் வருகின்றன; இதன் மூலம் பயணங்களின் அழகான தருணங்களை மிக தெளிவாகவும் இயற்கையாகவும் பதிவு செய்ய முடிகிறது. Holo Fusion Technology, Dynamic Stellar Ring Design மற்றும் Ultra Smooth AMOLED டிஸ்ப்ளே போன்ற அம்சங்கள், சிறந்த ஹார்ட்வேர் அனுபவத்தோடு சேர்ந்து Reno15 Seriesஐ சிறப்பாக்குகின்றன. OPPO India நிறுவனத்தின் கம்யூனிகேஷன்ஸ் ஹெட் கோல்டி பட்நாயக் அவர்கள் தெரிவித்ததாவது,

"இந்தியாவிலுள்ள 100 மில்லியனுக்கும் மேற்பட்ட OPPO பயனர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய, Reno15 Series மிக மேம்பட்ட கேமரா, AI வசதிகள் மற்றும் சிறந்த யூசர் அனுபவத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பயணிகளை, படைப்பாளிகளையும், அன்றாட வாழ்வின் அழகான தருணங்களையும் பதிவு செய்யும் முறையில் முழுமையாக மாற்றி அனுபவிக்க உதவுகிறது."

# பேலன்ஸ் அட்வான்டேஜ் நிதிகள்: சந்தை அசாதாரணம் மற்றும் பொருளாதார பின்னடைவுகளுக்கு எதிரான வலுவான முதலீடு!

சென்னை , பிப்.8

The Wealth Company MUTUAL FUND

தற்போதைய சந்தை நிலை மாறுபாடானது மற்றும் பெரு பொருளாதார சூழல் நிச்சயமற்றதாக இருப்பதால், முதலீட்டாளர்கள் குறைந்த ஆபத்துடன் வளர்ச்சி வாய்ப்புகளை தேடுகின்றனர். இதற்கிடையில், பேலன்ஸ் அட்வான்டேஜ் ஃபண்டுகள் அனுபவமிக்க மற்றும் புதிய முதலீட்டாளர்களுக்கும் ஒரு கட்டாயமான முதலீட்டுக்கருவியாக மாறியுள்ளது, சந்தை அசாதாரணம் மற்றும் எதிர்மறை அபாயங்களை குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பேலன்ஸ் அட்வான்டேஜ் ஃபண்ட் பங்குகள் மற்றும் நிலையான வருமானத்தை மதிப்பீடுகள் மற்றும் இடர் குறிகாட்டிகளின் அடிப்படையில் சமநிலைப்படுத்தும் திறன் கொண்டது. இது சந்தை மதிப்பீடுகள் கவர்ச்சிகரமாக இருக்கும்போது பங்கு வெளிப்பாட்டை அதிகரித்து, சந்தைகள் அதிக உச்சம் அல்லது அதிகரித்த நிச்சயமற்ற தன்மை காட்டும் போது கடன் வெளிப்பாட்டை குறைக்க உதவுகிறது. இதை தி வெல்த் கம்பெனி நிறுவனர் மற்றும் எம்.டி/சிஇஓ, மதுலுனாவத் கூறியுள்ளார். AMFI தரவுகளின்படி, பேலன்ஸ் அட்வான்டேஜ் ஃபண்டுகளில் கடந்த ஆண்டில் மாதாந்திர சராசரி நிகர வரத்து 1,377 கோடி ரூபாய், ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் 2,000 கோடி ரூபாயை தாண்டியது. புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் வெளிநாட்டு பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள் உள்ள சூழலில், இந்த நிதி போர்ட்ஃபோலியோ பின்னடைவை குறைத்து, நீண்டகால வளர்ச்சிக்கான சமநிலையுடன் முதலீட்டாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய வாய்ப்பாக இருக்கிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



### ஊத்தங்கரை அருகே

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க சேவை மையம்!

## அமைச்சர் சக்கரபாணி திறந்து வைத்தார்!!

ஊத்தங்கரை பிப்:08

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், செலகாரம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய பல்நோக்கு சேவை மைய அலுவலக கட்டடத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி ,மாவட்ட ஆட்சித்தலைவர்தினேஷ்குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தே.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார். பின்னர் அமைச்சர் சக்கரபாணி தெரிவித்ததாவது:

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றும் (PACCS as MSC) திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரைவட்டாரத்தில்செயல்படும்கே.கே.283 செலகாரம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பயன்பாட்டிற்கு புதிய பல்நோக்கு சேவை மைய அலுவலக கட்டடம் கட்டப்பட்டு துவக்கப்பட்டுள்ளது.கே.கே.283 செலகாரம்பட்டிதொடக்கவேளாண்மைகூட்டுறவு கடன் சங்கம் 04.10.1962 அன்று தொடங்கப்பட்டு, சுமார் 2,682 "அ" வகுப்பு உறுப்பினர்களுடன் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து நிகர இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. சங்கத்தின் 20242025 ஆம் ஆண்டிற்கான இறுதியாக முடிக்கப்பட்ட தணிக்கை அறிக்கையின்படி, ரூ.81.28 இலட்சம் நிகர இலாபம் ஈட்டப்பட்டு அதிலிருந்து "அ" வகுப்பு உறுப்பினர்களுக்கு 14%பங்குஈவுத்தொகையாகரூ.23,13,681/ வழங்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் மூலம் நாளது தேதியின்படி ரூ.631.96 இலட்சம் மதிப்பில் பயிர்கடனும், ரூ.6.44 இலட்சம் மதிப்பில் விவசாய நகைக்கடனும், ரூ.1858.79 இலட்சம் மதிப்பில்பொதுநகைக்கடனும், ரூ.228.37 இலட்சம் மதிப்பில் மகளிர்சுயஉதவிக்குழு கடனும், ரூ.1.10 இலட்சம் மதிப்பில் மாற்றுத்திறனாளிகள் கடனுதவி என மொத்தம் ரூ.27.26 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

சங்க உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட சேமிப்பு தொகை ரூ.171.90 இலட்சம், 7.75 சதவீத வட்டியில் ரூ.1550.26 இலட்சம் இட்டு வைப்பும், ரூ.8.86 இலட்சம் மதிப்பில் தொடர் இட்டு வைப்பு என மொத்தம் ரூ.1731.02 இலட்சம் மதிப்பில் இட்டு வைப்பு சேகரிக்கப்பட்டுள்ளது. செலகாரம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய பல்நோக்கு சேவை மைய அலுவலக கட்டிட திறப்பு விழாவின்போது 170 பயனாளிகளுக்கு ரூ.1,45,32,000மதிப்பில்நலத்திட்டஉதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் டாக்டர் மாலதி நாராயணசாமி, துணைப்பதிவாளர் பாலமுருகன், செயலாட்சியர்கோவிந்தராஜன், களஅலுவலர்அருண்குமார், சார்பதிவாளர்கள் புவனேஸ்வரி, ஸ்ரீதர், வட்டாட்சியர் ராஜலட்சுமி, திமுக ஒன்றிய செயலாளர்கள் எமூன்றம்பட்டி குமரேசன், எக்கூர் செல்வம்,ரஜினி செல்வம் ,ஒன்றிய துணை செயலாளர் சென்னைசெட்டி,ஆகியோர் பங்கேற்றனர்.



### மாநில அளவிலான

# கலைத்திருவிழா போட்டியில் தர்மபுரி மாணவன் சாதனை!

## கலெக்டர் பரிசு வழங்கி பாராட்டு!!

பாப்பிரெட்டிப்பட்டி. பிப். 8

2025 2026 ஆம் கல்வியாண்டில் கலைத் திருவிழா போட்டிகளில் களிமண் சிற்பம் செய்தல் பிரிவில் ஒன்றியம், மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அதிகாரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன் சதீஸ்வரன் தஞ்சை பெரிய கோவில் மாதிரியை செய்து களிமண் சிற்பம் பிரிவில் மாநில அளவில் முதலிடம் பிடித்து வெற்றி பெற்ற மாணவன்,மாணவர்களுக்கு பயிற்சி அளித்த கலையாசிரியர். கார்த்திகேயன் ஆகியோரை,

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி, தர்மபுரி மாவட்ட கலெக்டர் சதீஸ், தர்மபுரிமாவட்ட கல்வி அலுவலர் ஜோதிச்சந்திரா, அதிகாரப்பட்டி தலைமையாசிரியர்அன்பரின், பள்ளியின் இருபால் ஆசிரியர்கள், பிடிஎ தலைவர் ,எஸ்.எம். சி தலைவர் மற்றும் உறுப்பினர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவ,மாணவிகள் பாராட்டினர்.

### காவேரிப்பட்டணம் அருகே

# தடுப்பூசி செலுத்திய மறுநாளே இறந்த 5 மாத பெண் குழந்தை;போலீசார் விசாரணை!!

கிருஷ்ணகிரி,பிப்.8–

காவேரிப்பட்டணம் அருகே தடுப்பூசி போட்ட 5 மாத பெண் குழந்தை மறுநாளே இறந்தது. இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அருகே சாப்பர்த்தி பக்கம் உள்ளபந்தேரியை சேர்ந்தவர்சத்தியராஜ் (வயது 36). திருப்பத்தூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த சத்யா (29) என்ற பெண்ணுக்கும் திருமணமாகி, 5 மற்றும், 3 வயதில் பெண் குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் கடந்த 5 மாதங்களுக்கு முன் மூன்றாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது.

சத்தியராஜ் கடந்த, 2ந் தேதி திருப்பத்தூரில் உள்ள நிறுவனத்திற்கு சென்றவர் அங்கு இருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் சத்யா தனது 5 மாத பெண் குழந்தைக்கு பனகமுட்லு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி போட்டுவிட்டு வீட்டிற்கு திரும்பினார். நேற்று முன்தினம் முழுவதும் குழந்தைக்கு காய்ச்சல் அதிகமாக இருந்த நிலையில், நேற்று அதிகாலை குழந்தை பேச்சு மூச்சில்லாமல் இருந்தது.

இதனால் சத்யா குழந்தையை காவேரிப்பட்டணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்.அங்குகுழந்தையை பரிசோதனை செய்த டாக்டர்கள் குழந்தை இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து சத்தியராஜ் காவேரிப்பட்டணம் போலீசில் புகார் செய்தார்.

அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து குழந்தையின்உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனை முடிவிலேயே குழந்தை இறப்புக்கான காரணம் தெரிய வரும் என போலீசார் தெரிவித்தனர்.

# பாலக்கோட்டில் மோட்டார் சைக்கிள் திருட்டு!

பாலக்கோடு.பிப்.8–

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்த சிக்கார்தனஅள்ளி கிராமத்தை சேர்ந்தவர் மாரிமுத்து (56) வழக்கறிராக உள்ளார்.

மதியம் வங்கி வேலையாக பாலக்கோடு பேருந்து நிலையம் அருகே உள்ள எஸ்.பி.ஐ. வங்கிக்கு சென்றனர், தனது மோட்டார்சைக்கிளை வங்கியின் முன்பு நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். வங்கி வேலை முடிந்து மோட்டார்சைக்கிளை எடுக்க சென்றவர், நிறுத்திய இடத்தில் வாகனம் இல்லாதது கண்டு அதிர்ச்சி அடைந்தார்,மர்ம நபர்கள் மோட்டார்சைக்கிள்திருடி சென்றது தெரிய வந்தது.மோட்டார் சைக்கிளை கண்டுபிடித்து தரக்கோரி மாரிமுத்து பாலக்கோடு போலீஸ் ஸ்டேசனில் புகார் அளித்தார்.

இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து வங்கி முன்பு உள்ள சி.சி.டி.வி காட்சி பதிவுகளை வைத்து குற்றவாளி யை தேடிவருகின்றனர்.

### நாமகிரிபேட்டை

# போலீஸ் நிலையத்தில் புதிய இன்ஸ்பெக்டர் பதவியேற்பு!

ராசிபுரம்,பிப். 8

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த நாமகிரிபேட்டை போலீஸ்ஸ்டேசனில்புதிய இன்ஸ்பெக்டராக சிவக்குமார் இன்று பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை போலீஸ்ஸ்டேசனில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தவர் அம்பிகா. இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு நிர்வாக காரணங்களுக்காக கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பணிமாற்றம் செய்யப்பட்டார்.



இதனைத் தொடர்ந்து, நாமகிரிபேட்டை போலீஸ்ஸ்டேசன் இன்ஸ்பெக்டர் பணியிடம் காலியாக இருந்தது. இந்நிலையில், நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூரில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த சிவக்குமார், நாமகிரிபேட்டை போலீஸ் ஸ்டேசன் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டார்.

இதையடுத்து, அவர் இன்று முறைப்படி பொறுப்பு ஏற்றுக்கொண்டார். அவருக்கு போலீஸ் ஸ்டேசனில் பணியாற்றும் சப்இன்ஸ்பெக்டர்கள் மற்றும் சக போலீசார் பூங்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

# சேலம் அருகே தொழிலாளியிடம் நில மோசடி;8 பேர் மீது வழக்கு!

சேலம் பிப் 8–

சேலம் அருகே உள்ள வேம்படிதாளம் பகுதியை சேர்ந்தவர் முருகன் ( 50), கூலித்தொழிலாளி. இவர் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு ஒன்றை கடந்த சில நாட்களுக்கு முன்பு அளித்தார்.அதில் அவர் கூறியிருப்பதாவது: நான்வேம்படிதளத்தில் வசித்துவருகிறேன். எனக்கு மனைவி மற்றும் மகள் உள்ளனர்.

கடந்த ஆண்டு வேம்படிதாளம் பகுதியை சேர்ந்த வெள்ளையன் என்பவர் எனக்கு மது வாங்கி கொடுத்தார். பின்னர் அவர் என்னை மிரட்டி மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்துக்கு அழைத்து சென்றார். அங்கு என்னிடம் பல கையெழுத்து வாங்கினார்.

இதையடுத்து எனது சட்டைப்பையில் ரூ.4 ஆயிரத்து 500 வைத்து வேம்படிதாளம் காளியம்மன் பகுதியில் இறக்கிவிட்டு சென்றார்.

இதுகுறித்து எனது மனைவிக்கு தெரியவந்ததும் அவர் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகம் சென்று விசாரித்தார். அப்போது எனது பெற்றோர் எனக்கு உயில் மூலம் எழுதி வைத்த வேம்படிதாளம் கிராமத்தில் உள்ள 35 சென்ட் நிலத்தில் 25 சென்ட் நிலத்தை வேம்படிதாளத்தை சேர்ந்த அய்யனார், முருகேசன்,பிரேமா ஆகியோர் சார்பதிவாளருக்கு பணம் கொடுத்து அவர்கள் பெயரில் கிரையம் செய்திருப்பது தெரியவந்தது. எனவே இதுதொடர்பாக விசாரணை நடத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் அவர் கூறியிருந்தார்.இந்த புகார் தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கவுதம்கோயல் உத்தரவின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையின் தொடர்ச்சியாக, நிலமோசடி செய்தது தொடர்பாக அய்யனார், முருகேசன், பிரேமா, வெள்ளையன், குமார், சேகர், ரமேஷ்குமார் மற்றும் சார்பதிவாளர் ஆகிய 8 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வாலிபர் மீது தாக்குதல்; 3 பேர் கைது!

சரவணம்பட்டி,பிப்.8

கோவை சரவணம்பட்டியை அடுத்த காந்திமா நகர் பகுதியில் சேர்ந்த முரளிதரன் என்பவர் மகன் உன்னி (24), இவரது நண்பர்கள் காந்திபுரம் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவரது மகன் சதீஷ்குமார்(29) ,பென்னி என்பவரது மகன் ஷாம்லியோன்(19), ரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த தனசேகர் என்பவர் மகன் மணிகண்டன்( 29), இவர்கள் நான்கு பேரும் நண்பர்கள், சம்பவத்தன்று உன்னியிடம் தொலைபேசியில் சதீஷ்குமார் என்பவர் பேசியுள்ளார். இந் நிலையில் இருவருக்கும் தொலைபேசியில் தகராறு முற்றியுள்ளது, இதில் என்னிடத்திற்கு வந்து பார் என்று உன்னி கூறியதை கேட்டு கோபமடைந்த சதீஷ் மற்றும் நண்பர்கள் ஷாம்லியோன் மணிகண்டன் ஆகிய மூவரும் உன்னியை தேடி காந்தி மாநகர் வந்துள்ளனர். அப்போது வஉ சி நகர் பகுதியில் உன்னியை கண்டதும் மூவரும் சேர்ந்து உன்னியை தாக்கியுள்ளனர், இதில் காயமடைந்த உன்னி சரவணம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்ததை தொடர்ந்து வழக்கு பதிவு செய்த சரவணம்பட்டி காவல்துறையினர் சதீஷ் மணிகண்டன் ஷாம்லியோன்ஆகியமூவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தினமும் படியுங்கள் உள்ளாட்சி அரசு




கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கனிம வளத்துறையின் சார்பில், மாவட்டத்தின் அனைத்து சோதனைச் சாவடிகளையும் கண்காணிக்கும் வகையில் அமைக்கப்பட்ட கண்காணிப்பு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் திறந்து வைத்தார். அருகில் கனிம வளத்துறை இணை இயக்குநர் சுரேஷ் மற்றும் கனிம வளத்துறை அலுவலர்கள் உள்ளனர்.

# சிறுமி கடத்தல்; போக்சோவில் வாலிபர் கைது!

பாலக்கோடு.பிப்.8–

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த கூலி தொழிலாளியின் 14 வயது மகள், அரசு பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தார்.இவருக்கும் திருவண்ணாமலை மாவட்டம், அண்ணாநகர் பகுதியை சேர்ந்த பெயிண்டர் பார்த்தீபன் (19) என்பவருக்கும் இன்ஸ்டாகிராமம் மூலம் பழக்கம் ஏற்பட்டது, கடந்த 8 மாதத்திற்கு முன்னர் அவர் அந்த சிறுமியை கடத்தி சென்றார். இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர் சிறுமியை மீட்டு தரக்கோரி பாலக்கோடு காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.



இதனையறிந்த பார்த்தீபன் ஒரு வாரம் கழித்து சிறுமியை வீட்டிற்கு அனுப்பி விட்டு தலைமறைவானார்.

இதுகுறித்து பாலக்கோடு அனைத்து மகளிர் போலீசார் சிறுமியை கடத்திய பார்த்தீபன் மீது போக்சோ வழக்கு பதிவு செய்து தலைமறைவான பார்த்தீபனை தேடி வந்தனர்.

இந்த நிலையில் இன்று காலைபார்த்தீபன்கிருஷ்ணகிரி பகுதியில் இருப்பதை அறிந்த இன்ஸ்பெக்டர் கலைவாணி மற்றும் போலீசார் விரைந்து சென்று பார்த்தீபனை போக்சோ வழக்கில் கைது செய்து, நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி தருமபுரி சிறையில் அடைத்தனர்.



### அசல் சான்றிதழ் தர காலதாமதம்:

# நிதி நிறுவனத்தை கண்டித்து சாலை மறியல் செய்த தம்பதி; ராசிபுரத்தில் பரபரப்பு!

ராசிபுரம், பிப்.8–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூர் பகுதியை சேர்ந்தவர் கணேசன், 44. இவரது மனைவி யோகேஸ்வரி, 41. கூலி வேலை செய்து வருகின்றனர். இவர்கள் இருவரும் கடந்த , 2 ஆண்டுகளுக்கு முன்பு ராசிபுரத்தில் இருந்து புதிய டூ வீலரை வாங்கியுள்ளனர்.

இந்த வாகனத்திற்காக தனியார் பைனான்ஸ் மூலம் கடன் பெற்று, மாதம் தோறும் தவணையாக, 4,000 ரூபாய் வீதம் பணத்தை கட்டி வந்துள்ளனர். கடந்த மாதத்துடன் வாகனத்திற்காக வாங்கிய கடன்தொகை முழுவதையும் கணேசன் கட்டி முடித்து விட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து தனது இருசக்கர வாகனத்தின் ஒரிஜினல் ஆர்.சி., புத்தகம், தடையில்லா சான்று ஆகியவற்றை பெறுவதற்காக சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்திற்கு கணேசன் சென்றுள்ளார். அங்கு பணியில் இருந்த மேலாளர் ஆர்.சி., புத்தகத்தை தராமல் இழுத்தடிப்பு செய்து வந்ததாக கூறப்படுகிறது. கடந்த, 5 நாட்களாக கணேசன் மற்றும் அவரது மனைவி யோ கேஸ்வரி இருவரும்நிதிநிறுவனத்திற்குஅலைந்து திரிந்தும் எந்த பலனும் கிடைக்கவில்லை. இதனால் மனவேதனை அ டைந்த தம்பதியினர் நிர்வாகத்திடம் முறை யிட்டும் முறையான பதில் கிடைக்கவில்லை.

நிர்வாகத்தின் இந்த போக்கால் ஆத்திரமடைந்த கணேசன் மற்றும் யோகேஸ்வரி இருவரும் நேற்று திடீரென ராசிபுரம் டிவிஎஸ் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக தம்பதியினர் நடுரோட்டில் அமர்ந்து போராட்டம் நடத்தியதால் அந்த பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

அவ்வழியாக சென்ற அரசு மற்றும் தனியார் பஸ்கள், கார்கள் என நூற்றுக்கணக்கான வாகனங்கள் செல்ல முடியாமல் நீண்ட வரிசையில் நின்றன.

இதனால் அப்பகுதியில் மக்கள் கூட்டம் கூடி பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ராசிபுரம் போலீசார், சாலை மறியலில் ஈடுபட்ட கணேசன் மற்றும் யோகேஸ்வரியிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இது குறித்து நிதி நிறுவனத்திடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதி அளித்ததை தொடர்ந்து அவர்கள்போராட்டத்தைகைவிட்டுகலைந்து சென்றனர்.

# போச்சம்பள்ளியில் ரூ.5.54 லட்சத்திற்கு கொப்பரை தேங்காய்கள் விற்பனை!

கிருஷ்ணகிரி,பிப்.8

போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் இநாம் முறையில் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இதில் 3565 கிலோ கொப்பரை தேங்காய்கள், கிலோ ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.195.86க்கும், குறைந்த பட்சம் ரூ.90.99க்கும், சராசரியாக கிலோ ஒன்று ரூ.188.99க்கும் விற்பனையானது. அதன்படி ரூ. 5 லட்சத்து 54 ஆயிரத்து 513க்கு விற்பனையானது. இதன் மூலம் 53 விவசாயிகள் பயன்பெற்றனர்.

இதே போல் பருத்தி ஏலம் இநாம் முறையில் கடந்த 3 வாரங்களாக நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் 1887 கிலோ பருத்தி, ரூ.1 லட்சத்து 71 ஆயிரத்து 606க்கு விற்பனையானது. பருத்தி டிசிஎச் வகை அதிகப்பட்சம் கிலோ ரூ.91க்கும், ஆர்சிஎச் வகை ரூ.79.50 விற்பனை யானது. இதன் மூலம் 53 விவசாயிகள் பயன்பெற்றனர்.

இதுகுறித்து போச்சம்பள்ளி ஒழுங்கு முறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் அருள்வேந்தன் கூறும்போது, இங்கு தேசிய மின்னணு வேளாண்சந்தை (இநாம்) முறையில் விவசாய விளைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஏலத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் கலந்து கொண்டனர். இநாம் முறையில் நடந்த ஏலத்தில் கொப்பரை தேங்காய்கள், பருத்தி நல்ல விலைக்கு போனது. விற்பனை செய்யப்பட்ட தொகைகள் உடனடியாக விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. மேலும், நெல் ஏலமும் மின்னணு வர்த்தக முறையில் நடைபெற உள்ளதால், நெல்விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம், என்றார்.



அம்பத்தூர் மண்டலம், வார்டு83க்குட்பட்ட ரங்கா மஹாலில் நடைபெற்ற "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், 3 கல்லூரிகளைச் சார்ந்த 837 கல்லூரி மாணவர்களுக்குமடிக்கணினிகளை இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டலக்குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ந.உஷா, கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாராயணசாமி நாயுடு 101வது பிறந்தநாளை முன்னிட்டு

# தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வேலுசாமி தலைமையில் மலர் மாலை அணிவித்து மரியாதை!

கோவை,பிப்.8

தமிழக விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயிர் கடன் மற்றும் பண்ணை அபிவிருத்தி கடன் பெற்றுள்ளதில் இருந்து ஜப்தியில் விடுதலை மற்றும் விவசாயிகள் தினந்தோறும் விவசா யத்திற்கு உபயோகப்படுத்தும் கிணற்று மோட்டாருக்கு இலவச மின்சாரம் பெறுவதற்காக தமிழ்நாடு அரசிடம் 1970 முதல் 1980 வரை தமிழக விவசாயிகள் சங்கம் மூலம் தமிழக விவசாயிகளை மிகப்பெரிய அளவில் ஒன்று திரட்டி உச்சக்கட்ட போராட்டம் நடத்தி விவசாயிகளின் உரிமைக்காகவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விவசாயிகள் நலனுக்காக தமிழக விவசாயிகள் சங்கத்தை உருவாக்கி தோற்றுவித்த மறைந்த உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு 101 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாவட்டம் அன்னூர் வட்டம் கோயில்பாளையம் அருகே உள்ள வையம்பாளையம் கிராமத்தில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் மறைந்த உழவர் பெருந்தலைவர் நாராய



ணசாமி திருவுருவச்சிலைக்கு உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வேலுசாமி அவர்கள் தலைமையில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.இந்த நிகழ்ச்சியில் மாநில பொருளாளர் மோகன் குமார், மாநில துணைத் தலைவர் ராஜாபெருமாள், மாநில துணை பொதுச்செயலாளர் கணபதி, சேலம் மாவட்டத் தலைவர் ஏழுமலை மற்றும் மாநில ,மாவட்ட நிர்வாகிகள் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டு மறைந்த உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு புகழ் சேர்க்கும் வகையில் மரியாதை செலுத்தப்பட்டது.

# 7அப் சார்பில் "ஸ்னோஃப்ரெஷ் புத்துணர்ச்சியுடன் வெப்பத்தை வெல்லுங்கள்"எனும் புதிய விளம்பரப் பிரச்சாரம் தொடக்கம்




கோவை , பிப்.8

பெப்சிகோ இந்தியாவின் 7அப் தனது புதிய விளம்பரப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது, இது தென்னிந்தியா முழுவதும் கோடை புத்துணர்ச்சி பருவத்தின் தொடக்கத்தையும் அதன் 'சூப்பர் டூப்பர் ரிஃப்ரெஷர்' நிலைப்பாட்டின்நீர்க்கமானபரிணாமத்தையும்குறிக்கிறது. வலுவான மதிப்புடன் அதிகபட்ச புத்துணர்ச்சியை வழங்குதல், ரூ. 20/ விலையில் 400 மில்லி மூலம் நுகர்வோருக்கு அவர்களின் பணத்திற்கு அதிக புத்துணர்ச்சியை வழங்குவதற்கான 7 அப் இன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. தெற்கு சந்தைகளில் கோடை காலம் வந்து கொண்டிருப்பதால், இந்தப் விளம்பரப் பிரச்சாரம் புத்துணர்ச்சியின் ஸ்னோபிரெஷ் வெளிப்பாட்டை அறிமுகப்படுத்துகிறது, குளிர்ச்சியின் யோசனையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறது. பழக்கமான புத்துணர்ச்சி குறிப்புகளால் நிறைந்த ஒரு பான பிரிவில், ஸ்னோ என்பது உடனடி குளிர்ச்சி மற்றும் கடுமையான வெப்பத்திலிருந்து நிவாரணம் ஆகியவற்றின் மிகைப்படுத்தப்பட்ட காட்சி பிரதிநிதித்துவமாகப் பயன்படுத்தப்படுகிறது. இது வகைக்கு புத்துணர்ச்சியூட்டும் மற்றும் அதிக வெப்பம், அதிக ஈரப்பதம் கொண்ட தென்னிந்திய கோடைகாலங்களுக்கு குறிப்பாகப் பொருத்தமான மற்றும் 7அப்க்கு சொந்தமான ஒரு தனித்துவமான புதிய காட்சி மொழியை உருவாக்குகிறது.இந்த விளம்பரப் பிரச்சாரத்தின் மையத்தில், வழக்கமான வெளிப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட புத்துணர்ச்சியை மறுகற்பனை செய்யும் ஒரு துணிச்சலான படைப்பு அணுகுமுறை உள்ளது. இளைஞர் பார்வையாளர்களை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட இந்த ஸ்னோபர்ஸ்ட் ஒரு தனித்துவமான பிராண்ட் சொத்தாக வெளிப்படுகிறது.இந்த விளம்பரப் பிரச்சாரம் குறித்து பேசிய பெப்சிகோ இந்தியா பானஜலின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி மற்றும் முன்னணி அவே ஃப்ரம் ஹோம் சேனல் தருண் பகத், 7 அப் இன் முதல் வகையான வெளிப்பாட்டுடன், குறிப்பாக தெற்கு சந்தைகளில் கோடை காலம் ஆரம்பத்தில் வரும்போது, ஸ்னோகட்டி குளிர் பிரெஷ் எப்படி இருக்கும் மற்றும் எப்படி இருக்கும் என்பதை நாங்கள் மறுபரிசீலனை செய்துள்ளோம்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சி மகாலட்சுமி நகர் துளசி ஆதரவற்றோர் முதியோர் இல்லம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் ஐஏஎஸ் அவர்கள் துவங்கி வைத்தார் உடன் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் சக்தி சுபாஷினி மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் வாசுகி கருணாகரன் வெங்கடேஷ் பாபு உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

# திரௌபதி அம்மன் கோயில் வளாகத்தில் ஸ்ரீ புதுர் மாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு பந்த கால் நடும் விழா!



தர்மபுரி,பிப்.8

தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் உள்ள ஸ்ரீ புதுர் மாரியம்மன் கோவில் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது.

இக்கோயில் திருவிழாவினை 12 கிராம பொதுமக்கள் மற்றும் அனைத்து சமூகத்தினரும் இனைந்து வெகு விமர்சையாக கொண்டாடி வருகின்றனர்.

உள்ளூர், வெளியூர், மற்றும் வெளி மாநிலத்தை சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக பக்தர்கள் இத்திருவிழாவில் கலந்து கொண்டு திரௌபதி அம்மன் கோவில் வளாகத்தில் இருந்து ஸ்ரீபுதுர் மாரியம்மன் கோயில் வரை சுமார் 3 கிலோ மீட்டர் துரம் வரை நடந்தே சென்று பால்குடம், தீச்சட்டி, அலகு குத்துதல், சாமி வேடம் அணிந்து செல்லுதல், வாகனங்களை இழுத்தல் உள்ளிட்ட வேண்டுதல்களை நிறைவேற்றி சுவாமி தரிசனம் செய்வர்.

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் பௌர்ணமியைமுன்னிட்டுநடைபெறும் இத்திருவிழாவானது வரும் 23ம் தேதி முதல் 27ம் தேதி வரை தொடர்ந்து 5 நாட்கள் நடைபெற உள்ளது.

இத்திருவிழாவைமுன்னிட்டுபந்தகால் நடும் நிகழ்ச்சி திரௌபதி அம்மன் கோவில் வளாகத்தில் நடந்தது.

பந்தகால் கொம்பிற்க்கு மா இலை, பூந்தோரனம் கட்டி, மஞ்சள் குங்குமம் வைத்து பால் தீர்த்தம் இட்டு மகா தீபாரதனை காட்டப்பட்டது.

அதனை தொடர்ந்து மேளதாளம் முழங்க பந்தகால் நடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஊர் முக்கிய பிரமுகர்கள், நற்பணிமன்ற நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்டத்தில் 80 வயது மூதாட்டியின் மீது கஞ்சா போதையில் குடிகாரர்கள் தாக்கி துன்புறுத்தல்!

## குற்றவாளிகளை விரைவில் பிடிக்க பொதுமக்கள் வலியுறுத்தல்!!

தருமபுரி, பிப்.8

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மோளையானூர் அருகே உள்ள வாணியாறு அணை பகுதியில், பிப்ரவரி 2 (திங்கள்) மதியம் 2 மணியளவில், வாணியாறு அணைப்பகுதியில் அருகே உள்ள புங்கை கொட்டை



பொறுக்கிக் கொண்டிருந்த சுமார் 80 வயது மூதாட்டி காளியம்மாவை தூக்கிச் சென்று அடித்தும் துன்புறுத்தி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியதாக கூறப்படும் நிலையில். பிறப்புறுப்பு காது, மூக்கு, வாய் ரத்தம் கசிந்த நிலையில் மூதாட்டி உயிர்பிழைத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். புதரில் கிடந்த மூதாட்டியை பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்ட நிலையில் ரத்தப் போக்கு நிற்காமல் மயக்க நிலையில் உயிருக்கு போராடியதால், முதலுதவி செய்து தருமபுரி அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு ICU வார்டில் சேர்த்து சுயநினைவின்றி தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். மூதாட்டி காளியம்மாள் இறந்துவிட்டதாக நினைத்து குற்றவாளிகள் ஓடி மறைந்ததாகத் தெரிகிறது. இச்சம்பவத்தில் காவல்துறை மெத்தன்போக்கு காட்டுவதாக சமூக ஆர்வலர்கள் கடும் குற்றம் சாட்டியுள்ளனர். வாணியாறு பகுதியை சுற்றி பார்க்க வரும் சுற்றுலா பயணிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழல் உள்ளதாகவும் பழங்குடி மலைவாழ் மக்கள், இலங்கை தமிழ் வாழ் மக்கள் பயந்து வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர். மூதாட்டியை துன்புறுத்தி கொடுமைகள் செய்த குற்றவாளிகளைப் பிடித்து தண்டிக்க வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மூதாட்டியின் மீது நடந்த சம்பவம் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கையில் தகவல்களை இரண்டு பேர் மட்டும் வந்து தெரிவியுங்கள்விசாரணைசெய்துநடவடிக்கை மேற்கொள்கிறேன் என்று தகவல் அளித்துவிட்டு சாதாரணமாக சென்றதால் மலைவாழ் பழங்குடியின மக்களிடையே சற்று நேரம் பரபரப்பு ஏற்பட்டது

# தனிஷ்க் அண்ணா நகர், 'ஸ்பார்க்கிள் & பவுண்டரீஸ்' டி20 உலகக் கோப்பை முன்னோடி கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தியது

சென்னை,பிப்.8

மிகுந்த எதிர்பார்ப்புடன் நடைபெற்ற ICC T20 உலகக் கோப்பையை முன்



னிட்டு, தனிஷ்க் அண்ணா நகர் "ஸ்பார்கிள் & பவுண்டரீஸ்" சிறப்பு முன்னோட்ட உரையாடல் நிகழ்ச்சியை பிப்ரவரி 6 அன்று நடத்தியது.

இந்த நிகழ்ச்சி நுணுக்கமான நகைகளின் பிரகாசம் மற்றும் கிரிக்கெட்டின் உற்சாகத்தை இணைத்து வடிவமைக்கப்பட்டு, பார்வையாளர்களுக்கு உணர்வுப்பூர்வமான அனுபவத்தை வழங்கியது. நிகழ்ச்சியில் புகழ்பெற்ற தமிழ் நகைச்சுவை கலைஞர் பாஸ்கி, VJ பாலா மற்றும் இந்தியா A பெண்கள் கிரிக்கெட் வீராங்கணி மே. கே. ஹேமா மாலினி ஆகியோரின் சிறப்பான உரையாடல்கள்இடம்பெற்றன.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, தனிஷ்க் சென்னை பிராந்திய வணிக மேலாளர் ஜெகன் மற்றும் தமிழ்நாடு & கேரளா மார்க்கெட்டிங் மேலாளர் ஆதித்ய சுந்தர், தனிஷ்கின் நகைகளுக்கு அப்பாற்பட்டு பயனுள்ள அனுபவங்களை உருவாக்கும் முனைப்பை வலியுறுத்தினர். மேலும், மே. ஹேமா மாலினி கே, பி. ஸ்ரீநிவாச ராவ் (கிரிக்கெட் பயிற்சியாளர்) மற்றும் என். விஜயகுமார் (கிரிக்கெட் மைதான சேவை) ஆகியோரின் விளையாட்டில் அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகளை கௌரவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தனிஷ்க்நிறுவனத்தின்நிறுவனர் சி. சிவகுமார் மற்றும் நிர்வாக பங்குதாரர் திருமதி சித்ரா சிவகுமார் கலந்து கொண்டு நிகழ்ச்சியைசிறப்பித்தனர். "ஸ்பார்கிள் & பவுண்டரீஸ்" தனிஷ்கின் கலாச்சார ரீதியாக பொருத்தமான அனுபவ முயற்சிகளின் ஒரு பகுதியாக, கிரிக்கெட், கதை சொல்லல் மற்றும் பகிரப்பட்ட உற்சாகங்களை இணைத்து வாடிக்கையாளர்களுக்கு மறக்கமுடியாத, உற்சாக மிக்க மாலை அனுபவத்தை வழங்கியது.

# 1200 கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு நூலகத்தில் ஆயுட்கால உறுப்பினர் அட்டை!

## சொந்த செலவில் வழங்கிய ஆலங்காயம் திமுக ஒன்றிய செயலாளர் வி.எஸ். ஞானவேலன் வழங்கினார்!!



ஆம்பூர், பிப்.8

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த மதனாஞ்சேரி தளபதி அறிவாலயத்தில் சமூக சேவகர் ஆலங்காயம் திமுக ஒன்றிய செயலாளர் வி.எஸ். ஞானவேலன்என்பவர் தனது 42 வது பிறந்த நாளை முன்னிட்டு வாணியம்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தும்பேரி, சிக்கனாங்குப்பம், மதனாஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு பள்ளியில் பயிலும் 1200 மாணவர்களுக்கு தனது சொந்த செலவில் ரூபாய் 36 ஆயிரம் மதிப்பீட்டில் நூலகத்தில் ஆயுட்கால உறுப்பினராக சேர்த்து மாணவர்கள் பயன் பெறும் வகையில் ஆயுட்கால உறுப்பினர் அட்டையை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்துவளையாம்பட்டு, மதனாஞ்சேரி ஆகிய பகுதிகளில் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு சுமார் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பிலான இலவச சேலை மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். பின்னர் பொது மக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்களுக்கு அசைவ விருந்து வழங்கி தனது கிராமத்தில் உள்ள தளபதி அறிவாலயத்தில் 42 கிலோ கேக் வெட்டி தனது பிறந்த நாளை கொண்டாடினார். அவருக்கு பல்வேறு கட்சி நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள்தொண்டர்கள்சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி பணியாளர்கள் சேலத்தில் 4-வது நாளாக தொடர் போராட்டம்!

## சேலம் தவெக மத்திய மாவட்ட செயலாளர் தமிழன் ஆ. பார்த்திபன் தலைமையில் 100-க்கும் மேற்பட்டோர் ஆதரவு தெரிவித்தனர்!!

சேலம்,பிப்.8

தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி பணியாளர்கள். தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் பெரும் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, சேலம் மாவட்டம் டவுன் கோட்டை மைதானத்தில், நேற்று நான்காவதுநாளாகதொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் தமிழக வெற்றி கழகத்தின் சேலம் மத்திய மாவட்ட செயலாளர் தமிழன் ஆ. பார்த்திபன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட அக் கட்சியினர், சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை நேரில் சந்தித்து. தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜயின் சார்பில், தங்களது ஆதரவினை தெரிவித்துக் கொள்வதாக தமிழன் பார்த்திபன் கூறினார். மேலும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் அவர்களுடைய பணியில் எவ்வாறு சிரமப்பட்டு வருகின்றனர், என்பதை கட்சியின் தலைவர் விஜய் நன்கு அறிவார். மேலும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்



கள் மீது விஜய் எப்போதும் அளவரிந்த பாசத்தை வைத்துள்ளார் என்றும், மேலும்தமிழகமக்களுக்கு அவர்களுடைய வாழ்வாதார பிரச்சனையில் ஏதேனும் ஏற்பட்டால் அதற்கு முதல் குரலாக தலைவர் விஜயின் குரல் தான் வரும் என்றும், மக்களுக்காக சேவை செய்வதற்கு தான் பல்லாயிரம் கோடி ரூபாய் வருமானத்தை விட்டு விட்டு அரசியலுக்கு வந்துள்ளார். அவரை பற்றி பேசுபவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசி கொள்ளட்டும், விஜயின் ஆதரவு எப்போதும் சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களுக்கு உண்டு. விஜய் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் முதல் கையெழுத்து, தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் அனைவரும் பணி நிரந்தரம் செய்வதில் தான் அவர் முதல் கையெழுத்து இடுவார். இதை நாங்கள் முதல் வாக்குறுதியாக சேலம் மாவட்டத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். யாரும் யாருக்கும் பயந்து கொள்ள வேண்டாம், அங்கன்வாடி ஊழியர்களுக்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் என்றும் உறுதியாக துணையாக நிற்பார் என சேலம் மத்திய மாவட்ட செயலாளர் தமிழன் பார்த்திபன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் சத்துணவு அங்கன்வாடி பணியாளர்கள் மாநில சங்க துணைத் தலைவி சரோஜா, தலைமையில் 350 க்கும் மேற்பட்டோருக்கு, தமிழக வெற்றி கழகத்தின் சேலம் மத்திய மாவட்ட செயலாளர் தமிழன் பார்த்திபன் இரவு உணவினை வழங்கி அவர்களுக்கு உறுதுணையாக நிற்கும் எனக் கூறினார். தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை தமிழக வெற்றிக்கழக சேலம் மாவட்ட செயலாளர் சந்தித்து பேசி உள்ளது சேலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சேலம் மாநகர காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில், தமிழ்நாடு ராஜிவ்காந்தி பஞ்சாயத்துராஜ் சங்கதன் மாநில, மாவட்ட, மண்டல நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

சேலம்,பிப்.8

சேலம் மாநகர காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில், தமிழ்நாடு ராஜிவ் காந்தி பஞ்சாயத்துராஜ் சங்கதன்மாநில, மாவட்ட, மண்டல நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் வெள்ளிகிழமை 6226 அன்று தமிழ்நாடு பஞ்சாயத்துராஜ்சங்கதன்அமைப்பின் மாநில துணை தலைவர் லயன் டாக்டர் எஸ். ரகுநாத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள், மற்றும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சி பணிகளில் நிர்வாகிகள் முதல் தொண்டர்கள் வரை எவ்வாறு சிறப்பாக பணியாற்றுவது, மேலும் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி அவர்களை பிரதமர் பதவியில் அமரவைத்து, மத்தியில் காங்கிரஸ் ஆட்சியை கொண்டு வருவது, தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள் எவ்வாறு



இருக்க வேண்டும், என்பதுள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 300க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கமிட்டி மற்றும் பஞ்சாயத்து ராஜ் சங்கதன் அமைப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது மேலான ஆலோசனைகளை தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்கள் இனாமுல் ஹாசன், ரமேஷ், காளிமுத்து, சுஷ்மா வர்மா, தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சங்கதன் அமைப்பின் மாநில தலைவர் சதீஷ்குமார், சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாநகராட்சி துணை மேயர் சாரதாதேவி, காங்கிரஸ் சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் தேவேந்திரன், காங்கிரஸ் மேற்கு மாவட்ட தலைவர் ரத்னவேல், காங்கிரஸ் கமிட்டி மாநில செயலாளர் சரவணன், மாநில காங்கிரஸ் எஸ்இஎஸ்டி துணை தலைவர் தினகரன், ஓபிசி ஏடி. சுப்பரமணி, எஸ்இஎஸ்டி பிரிவு மாவட்ட தலைவர் சிவகுமார், சேலம் காங்கிரஸ் கமிட்டி மொட்டையாண்டி, வரதன், மோகன், சுப்ரமணி, பிரபு, சங்கர், பாண்டியன், கோவை சுந்தரம், சாந்தமூர்த்தி, பார்த்திபன், குணசேகரன், திருஞானம், உள்ளிட்ட காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.